


கமால் பிரதர்ஸ்

# தெய்வப்பிறவி

H.Rao

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு

ஸ்டூடியோ: ஏவி எம்

**கமால் பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்**

அளிக்கும்

# தெய்வப்பிறவி

நடிகர்கள் :

**சிவாஜி கணேசன் .... S. S. ராஜேந்திரன்**
K. A. தங்கவேலு .... T. R. நடராஜன்
K. சாரங்கபாணி .... A. கருணாநிதி
S. ராமாராவ் .... C. S. பாண்டியன்
K. M. நம்பிராஜன் .... S. L. நாராயணன்
K. துரைசாமி .... N. S. சுப்பையா
திருவேங்கடம் .... T. A. சதாசிவம்
S. P. முத்துராமன் .... P. வைரவசுந்திரம்
A. S. சின்னையா .... கரிக்கோல்ராஜு
மாஸ்டர் கோபி .... மாஸ்டர் வெங்கடேசன்

நடிகைகள் :

**பத்மினி .... M. N. ராஜம்**
M. சரோஜா .... N. லலிதா
M. S. சுந்தரிபாய் .... P. S. ஞானம்
K. S. அங்கமுத்து .... S. ராதாபாய்
P. G. லக்ஷ்மிராஜம்

கதை வசனம் :

**K. S. கோபால கிருஷ்ணன்**

பாடல்கள் :

உடுமலை நாராயணகவி K. S. கோபால கிருஷ்ணன்
தஞ்சை ராமையாதாஸ் கவி. ராஜகோபால்

இசை அமைப்பு : **R. சுதர்சனம்**

தயாரிப்பு :

**கமால் பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்**

டைரக்ஷன் : **கிருஷ்ணன் பஞ்சு**

ஸ்டுடியோ : **ஏவி. எம்.**

பின்னணி இசை: AVM ஸ்டூடியோ வாத்திய கோஷ்டி

பின்னணிப் பாடல்கள்:

சிதம்பரம் ஜெயராமன், சீர்காழி கோவிந்தராஜன்,
T. M. சௌந்திரராஜன், S. C. கிருஷ்ணன்,
K. ஜமுனு ராணி, R. ராஜலக்ஷ்மி, L. R. ஈஸ்வரி.

நடன அமைப்பு:

K.N. தண்டாயுதபாணி பிள்ளை, A.K. சோப்ரா "பத்மா"

ஒளிப்பதிவு டைரக்டர்: S. மாருதிராவ்

ஆபரேடிவ் காமிராமேன்: V. புண்ணியகோடி
உதவி: B. தனசிங், D. ராஜகோபால், மச்சவல்லபன்

ஒலிப்பதிவு டைரக்டர்: முகுல்போஸ்

ஒலிப்பதிவு: S. P. ராமனுதன்

உதவி: { M. சாந்தாராம், S. D. புஷ்பராஜ், K. சம்பத், S. இஸ்மாயில்

எடிட்டிங்: ... S. பஞ்சாபி
உதவி: ... R. விட்டல், O. நரசிம்மன்
ஆர்ட் ... H. சாந்தாராம்
உதவி ... { N. மோஹன்ராஜ், P. L. சண்முகம்.
பிராஸஸிங் ... சர்தூல்சிங் ஸேத்தி
உதவி ... { T. ராமசாமி, P. சோமு, மனோஹர் சிங் ரேவத், K. பஞ்சு
மேக்கப் ... { K. N. கினி, T. M. ராமச்சந்திரன், D. தனகோடி, K. குருசாமி.
உதவி ... { L. முத்தப்பா, சரஸ்வதி அம்மாள்
செட்டிங்ஸ் ... { S. ஆறுமுக ஆசாரி, V. நாகன் ஆசாரி.
உடைகள் ... { K. A. ரஹிமான், P. ராமகிருஷ்ணன்.
புரொடக்ஷன் எக்ஸிக்யூடிவ் M. சரவணன்
புரொடக்ஷன் மானேஜர் ... { K. K. ரத்னம் பிள்ளை, N. S. மணி
உதவி டைரக்ஷன்: R. பட்டாபிராமன், R. விட்டல்.

# தெய்வப்பிறவி

## கதைச் சுருக்கம்

---

**மாதவன்**—வெள்ளையுள்ளம் படைத்தவன். வெளுத்ததெல்லாம் பாலென்றெண்ணும் வெகுளி. அவனுக்கு ஒரு தம்பி. அரும்பிலே குறும்பு நிறைந்தவன்.

**தங்கம்**—பெயரைப் போன்ற குணம் படைத்தவள் அவளுக்கும் ஓர் தம்பி. நல்லபிள்ளை.

**நாயர்**—இரக்க சுபாவம் கொண்டவன். தங்கம் வீட்டுத் திண்ணையில் டீக்கடை வைத்திருக்கிருன் தங்கத்தை தங்கையாக எண்ணிப் பாதுகாக்கிருன்.

தங்கத்திற்கும் மாதவனுக்கும் காதல் ஏற்படுகிறது. மணந்து கொள்கின்றனர்.

கொழுந்தன் மனோகரை குழந்தையாக நேசிக்கிருள் தங்கம். மைத்துனன் ராமுவை, மைந்தனுக வளர்க்கிருன் மாதவன்.

காலச் சக்கரம் சுழல்கிறது. மேஸ்திரி மாதவன் காண்ட்ராக்டர் மாதவனுகிருன். பொருள் குவிகிறது. டீக்கடை நாயர், தங்கம் வீட்டு சமையற்காரனுகிருன். இந்நிலையிலே மாதவனின் தந்தை பெரியசாமியின் அபிமான மனைவியும், அவள் மகள் நந்தினியும் அங்கு வந்து சேருகின்றனர். தரங்கெட்ட உறவாக இருந்தாலும் ஒரு வகையில், தனக்குத் தாயும் தங்கையுமாயிற்றே என்று மாதவன், தன் இல்லத்திலேயே அவர்களுக்கு இடங்கொடுக்கிருன்.

தங்கமும் சமையற்காரன் நாயரும் சகோதர பாசத்தில் பழகுகின்றனர். அவர்களது நெருங்கிய பழக்கம் இழிந்த குணம் படைத்த நந்தினிக்கு, நேர்மையற்றதாக இருக்குமோ என்று தோன்றுகிறது. தன் எண்ணத்தை தமையனிடம் வெளியிடுகிருள். நந்தினி தன் தங்கையென்ற உண்மையை மாதவன், தன் மனேவியிடம் மறைத்தாலும் தங்கைக்கு உரித்தான அன்போடு பழகுகிருன். அவர்களது பழக்கம் நாயர் மனதில் தவருன எண்ணத்தை உண்டாக்கு கிறது. தங்கத்திடமும் சொல்லிவிடுகிருன்.

இரண்டு பக்கத்திலும் சந்தேகம் இதற்கிடையில் ராமுவும் மனேகரும் ஒரே பெண்ணை காதலிக்கின்றனர். தமக்கையின் வேண்டுகோளுக்கிணங்க தன் காதலை விட்டுக் கொடுக்கிருன், ராமு.

**ஆனல், அவர்களில் யாருடைய காதல் வெற்றி பெறுகிறது ?**

**நந்தினி தன் தங்கையென்ற உண்மையை மாதவன் மனேவியிடம் மறைத்த காரணமென்ன ?**

**தம்பதிகளுக்குள் ஏற்பட்ட சந்தேகம் எப்படித் தீர்ந்தது ?**

**வெண்திரையில் காணுங்கள்.........**

# தெய்வப்பிறவி

## பாடல்கள்

---

இயற்றியவர் : K. S. கோபாலகிருஷ்ணன்

பாடியவர்கள் : S. C. கிருஷ்ணன், ராஜேஸ்வரி & ஈஸ்வரி குழுவினர்

**கோரஸ் :** அய்லஸா ஹோ அய்லஸா
**ஆண் பெண்** கட்டடத்துக்குமனைபொருத்தம்அவசியம்
**கோரஸ் :** காதலுக்கு மனப் பொருத்தம் அவசியம்

**ஆண் :** மட்ட சுத்தம் பார்த்து வீடு கட்டவேணும்

**கோரஸ் :** வீடு கட்டவேணும்

**ஆண் :** மாமியாரெப் பாத்து பொண்ணை கட்ட வேணும் (கட்டடத்துக்கு)

**பெண் :** குடையைப் பிடிச்சு நடக்கிருரு மேஸ்திரி யாரு—அவர்
குறுகுறுத்த கண்ணுக்குள்ளே அகப்பட்டதாரு

**ஆண் :** நடை பழகி சதுரு பண்ணும் தங்கத்தைப் பாரு—அதுக்கு
நட்டுவாங்கம் போடுருரு கண்ணலெப் பாரு (கட்டடத்துக்கு)

**பெண் :** கடைக்காலை தோண்டுரப்போ கொத்தனரே
கடைக் கண்ணுல் பார்ப்பதென்ன கொத்தனரே

ஆண் : அடையாளம் புரிஞ்சிக்கோணும்
தங்கபாப்பா—அது
ஆசை படுத்தும்பாடு தங்கபாப்பா
—(கட்டடத்துக்கு)

பெண் : சாரத்திலே நடக்கிறப்போ கொத்தனரே
—தங்கம்
சதுருபண்ணி நடப்பதென்ன கொத்தனரே

ஆண் : ஓரத்திலே அவ நடந்தா தங்கபாப்பா
—அவரு (மேஸ்திரி)
உடம்பெல்லாம்நடுங்குதுபார் தங்கபாப்பா
(கட்டடத்துக்கு)

---

இயற்றியவர் : **உடுமலை நாராயண கவி**

பாடியவர்கள் : **C. S. ஜெயராமன் & ஜானகி**

அன்பாலே தேடிய என்
அறிவுச் செல்வம் தங்கம்
அம்புவியின் மீது நான்
அணிபெரும் ஓரங்கம் —(அன்பாலே)

இன்பம் தரும் தேனிரவு
இதற்குண்டோ ஆதங்கம்
ஏகாந்த வேளை வெட்கம்
ஏனோ வாயென் பக்கம் —(அன்பாலே)

உடல் நான் அதில் உரம் நீ யென
உறவு கொண்டோம் நேர்மையால்
கடல் நிலவாய் காட்சியிலே
கலந்து நின்றோம் ப்ரேமையால்

புடம் நிறை மாற்றறியா
பொன்னே சொல் ஏன் ஜாலம்
போனால் வராது இதுபோலே
காலம் இனி —(அன்பாலே)

இயற்றியவர் : கவி ராஜகோபால்
பாடியவர் : ஜமுனாராணி

இவர்கானா இவர்பானா இவங்கெல்லாம்
பெரிய சோனா மெய்தானா
இல்லே பொய்தானா

கானா இவரு காரியவாதி
கவனிச்சு நடப்பாரு
கனியும் வரையும் காத்திருப்பாரு
கலங்கிட மாட்டாரு
கன்னியின் மடியிலே
கனியைப்போல் கிடப்பாரு (இவர் கானா)

பானா இவரு பயங்கரவாதி
பதுங்கிப் பாய்வாரு
பார்த்தால் குள்ளம் பரந்த உள்ளம்
பம்பரத் தலைபாரு
பார்ப்பதோ இங்குதான்
பார்வை எல்லாம் வேறு (இவர் கானா)

சோனா இவரு சோத்தைக் கண்டால்
சொக்கி சொக்கிப் போவாரு
சோனா இவரு சொல்லழகன் பாரு
திக்கித் திக்கிப் பேசுவாரு
இந்த சோனா ஜோக்கர் சீட்டு
அந்த சோனா அவியல் கூட்டு
உண்மையில் இவங்கெல்லாம்
ஒன்பது ரூபா நோட்டு (இவர் கானா)

---

இயற்றியவர் : K. S. கோபாலகிருஷ்ணன்
பாடியவர் : சீர்காழி கோவிந்தராஜன்

மனிதனை மனிதன் மதித்திடவேண்டும்
மாறா அன்புடனே, எந்நாளும் சீராய் வாழ்ந்திடணும்
எல்லோரும் சேர்ந்தே வாழ்ந்திடணும்

அஸ்வனி, பரணி, கார்த்திகை
ரோகிணி, மிருகசீரம், திருவாதிரை
புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம்
பூரம், உத்திரம், அஸ்தம்
சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம்
கேட்டை, மூலம், பூராடம்
உத்திராடம், திருவோணம், அவிட்டம்
சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி—

மோப்பம் பிடித்த ஓர் பாலகன்—தேங்காய்
    ஆப்பம் வேண்டுமென்று கேட்டனன்—பசி
ஏப்பம்விட்ட சிறுபாலகன்—மயங்கி
    தொப்பென்றே பூமியில் விழுந்தனன்
ஆடை இல்லாத ஒரு பாலகன்—திங்க
    சீடை வேண்டுமென்று கேட்டனன்
கோடை இடி கேட்ட நாகம்போல் நெஞ்சம்
    குமுறி குமுறி தாயும் அழுதனள்

துவாரகை போய்வருவீர்
அன்பர்கள் நினைப்பதை அக்கணம் தந்திடும்
    ஆலிலைமேல் வந்த அய்யன் வாழ்ந்திடும் (துவா)

எப்படி எடுத்துரைப்பேன் என்னுயிர் நண்பனிடம்
    வரும்படி இல்லாத வறுமையின் கொடுமையை
உப்புக்கும் பருப்புக்கும் செப்புக்காசு இல்லையென்று
    உன்னால் முடிந்ததை பிச்சைதர வேண்டுமென்று
(எப்படி)

நடந்தார் பல நாடு நகரமதை கடந்தார்
பலகாத தூரமே
செல்வந்தனைத் தேடி துவாரகை
    செல்வந்தனை நாடி
காடு மேடு பள்ளமென்று பாராது நில்லாது
தள்ளாத வயதில் வேகமாய் (நடந்தார்)

நில்லய்யா–நீயாரென்ற விபரத்தைச் சொல்லய்யா
வல்லார்கள் எல்லோரும் வணங்கிடும் வாசலில்
கல்லாத மனுஷன்போல் சொல்லாமல் செல்கின்றீர்
(நில்லய்யா)

புசித்தார் ஒருபிடி அவலை புசித்தார்
அன்போடு தருதல் விஷமாகினும்—அது
அமுதமாகுமென்று புசித்தார்
அன்பன் படுகின்ற துன்பம் நீங்கி
பேரின்ப வாழ்வு பெற (புசித்தார்)

மங்களம் சுப மங்களம்
நித்ய ஜெய மங்களம்

---

இயற்றியவர் : **தஞ்சை ராமையாதாஸ்**
பாடியவர்கள் : **T. M. சௌந்தரராஜன் & ராஜலட்சுமி**

**பெண் :** வயசு பெண்ணை மறந்திடலாமா மாமாவே
—ஏமாமா
என்மனசைவிட்டு பிரிஞ்சிடலாமா-ஏமாமா
மாதம் ஒண்ணாச்சி
மனசும் என்னாச்சி—உன்னை
மனுஷனாக நெனச்சதெல்லாம் வீணாச்சி

**ஆண் :** கொல்லாதே கொல்லாதே
கொக்கரிச்சி நில்லாதே
கோணமலை சாமிபோல துள்ளாதே
ஏ... பொண்ணே மீனாட்சி
இனிமே நானாச்சி
கண்ணே உனக்கு காதல் தானம் தந்தாச்சி

**பெண் :** கல்லால் அடிக்கல்லே, சொல்லால்
அடிக்கல்லே
வில்லால் அடிக்கவாரான்—மன்மதராஜன்
வீட்டுமேலே பாணம் போடுறான்.

ஆண் : சிங்கார செல்லக் குட்டிநீயே—யாரும்
திங்காத வெல்லக்கட்டி நானே
தென்னாட்டுச் சோலையிலே
சிட்டாகவே பிறந்த
கண்ணாட்டி உன்னை மறப்பேனோ

இருவரும் : ஆனா படிக்கலே ஆவன்னா புடிக்கலே
அக்கன்னாவை தாண்டி வந்துட்டோம்
அதுக்குள்ளாக அப்பாவும் அம்மாவும்
ஆயிட்டோம்

இருவரும் : டியா டியாலோ... ஆயாலோ...
கௌதாரி லே லோ

குறவன் : டிக்கானா போடுவோம் டேராவுக்குள்ளே

குறத்தி : தில்லானா பாடுவோம் ஜோராக உள்ளே

குறவன் : ஜில்லாகி புல்புல்மே வந்தாரு புள்ளே

குறத்தி : குள்ளநரி கொம்பு சாமி சாமி—விலைக்கு

குறவன் : கொண்டு வந்தாள் குட்டி ராமி ராமி
குழந்தை குட்டிக்கு கட்டுங்க சாமி (டியா)

குறவன் : தீம் தடாகா தளாங்கு தின்னா மைனா—மைனா

குறத்தி : கொஞ்சம் சில்லரைக் காசை வீசிப்போடு
நைனா—நைனா

குறவன் : சின்னப் பொண்ணை பாத்து இளிப்பது
என்னா என்னா—உன்
கன்னத்தில் பதம் பாத்திடுவோமே நின்னா
நின்னா

குறத்தி : கந்தையை ஜோரா தைக்கிற கோணி ஊசி
ஊசி—பொம்பளே
கழுத்தை மறைக்கிற ஒண்ணா நம்பர் பாசி
...பாசி

குறவன் : அந்தரடிக்கிற சாமிபோடு காசி காசி—இந்த
அம்மா பொண்ணு கையி ரொம்ப ராசி ராசி

இயற்றியவர் : உடுமலை நாராயணகவி

பாடியவர் : ஜமுனா ராணி

தாரா தாரா வந்தாரா
சங்கதியேதும் சொன்னாரா—அவர்
சந்தோஷமாக வந்தாரா—இல்லை
சஞ்சலமாகவே இருந்தாரா (தாரா)

சீரான உன்னை ஜோடியோடு
தெரிசனம்தான் செய்தாரா
தேவி என்னைக் காணேமென்று
சிங்காரமாய் வைதாரா (தாரா)

பூத்தமுல்லை மலர்தன்னைப்
பார்த்து மெல்லச் சிரித்தாரா
வாய்த்த இவளை மனதில் எண்ணி
மரத்தைக் கட்டிப் பிடித்தாரா (தாரா)

---

இயற்றியவர் : உடுமலை நாராயணகவி

பாடியவர் : C. S. ஜெயராமன்

தன்னைத்தானே நம்பாதது சந்தேகம்—அதற்கு
சந்தர்ப்பம் சூழ்நிலை தாய்தந்தையாகும்—
தன்னைத் (தானே)

மானாபிமானந் தன்னை மறைவாக்கும்—நல்ல
மாண்புடைய மக்களை மடையராக்கும்—மேலும்
வீணான யோசனைக்கே தன்னை இடமாக்கும்—பல
விபரீதச் செயல்களை விளைவாக்கும்—
தன்னைத் (தானே)

ஓரிடம் நிலையாக நில்லாத ரதம் போலே
உள்ளத்தை ஓடவிடும்—பின்னும்
சேரும் இடம் வந்து சேராத ஓடமாய்
திசைமாறச் செய்துவிடும்—காதில்

கமால் பிரதர்ஸ்

# தெய்வப்பிறவி

பாடல்களை

## கொலம்பியா

## ரிக்கார்டுகளில் கேளுங்கள்

★

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்,

மதருஸ்-2

வடபழனி அச்சகம், சென்னை-26.